# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8040815

1. District : Theni District PS: V&AC, Theni Year: 2023 FIR No. 02/2023 Date: 27/06/2023
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : 06/06/2023, 20/06/2023 and 26/06/2023 Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 27/06/2023 Time : 15.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 16.00 Hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Computer typed petition
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 60 Kms Southwest
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : O/o the Panchayat Union, Cumbum, Theni District.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Karuppasamy (b) Father's/ Husband's Name : C. Pitchai
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1986 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Civil Contract Works (g) Address : D.No. 30A, W-4, Karuppasamy Kovil street, Gudalur, Uthamapalayam Taluk, Theni District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Radhakrishnan, Overseer, O/o the Panchayat Union, Cumbum, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

- Computer typed separate sheet enclosed -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. [signature] 27/06/23 | [signature] 27/06/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27/06/2023 / 17.30 hrs.

Name: பெயர் C. Jeyapriya
Rank: நிலை Inspector of Police, V&AC, Theni. No. எண் ..........

12. F.I.R. contents (Attach separate sheet if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.02/2023-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.**

**சமர்ப்பிக்கப்படுகிறது:** தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 27.06.2023-ம் தேதி 15.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கூடலூர், கருப்பசாமி கோயில் தெரு, வார்டு-4, கதவு எண்-30 A-ல் வசிக்கும் திரு.பிச்சை என்பவரது மகன் திரு.கருப்பசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்தாருடன் குடியிருந்து கொண்டு, எனது தாயார் திருமதி.சந்திரா பெயரில் தேனி மாவட்டம் கம்பம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் அரசு ஒப்பந்த பணிகளை செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். எனது தந்தையார் திரு.பிச்சை மற்றும் தாயாருக்கு வயதாகிவிட்டதால் அவர்கள் எனது பராமரிப்பில் இருந்து வருகிறார்கள். தாயார் பெயரில் எடுக்கப்படும் அரசு ஒப்பந்த பணிகளை செய்வதற்கு எனது தாயார் திருமதி.சந்திரா அவர்கள் எனக்கு அனுமதி கடிதம் கொடுத்துள்ளார். அதனை கம்பம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளேன். தற்போது நான் கம்பம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கருநாக்கமுத்தன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, கோவிந்தன்பட்டி மற்றும் சுருளிப்பட்டி ஊர்களில் அரசு ஒப்பந்த கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து வருகிறேன். அதன்படி கருநாக்கமுத்தன்பட்டி ஊராட்சியில் IMSC திட்டத்தில் ஆண்கள் நவீன கழிப்பறை பராமரிப்பு வர்ணம் பூசுதல் பணியை ரூ.1,83,000/-க்கு எடுத்து அதற்கு ஊராட்சி மூலம் 03.04.2023-ல் பணி உத்தரவு பெற்று 31.05.2023-ல் பணியை செய்து முடித்தேன். அந்த பணியிடத்தை கம்பம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் ஓவர்சியர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் 31.05.2023ல் அளவீடு செய்து ஆய்வு செய்தார். அன்றைய தினம் அதை புகைப்படம் எடுக்கப்பட்டது. அதன்பிறகு மேற்படி வேலைக்குரிய பில் தொகை பெற ஓவர்சியர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் பணியை முடித்ததற்கான புகைப்பட நகல் மற்றும் மேற்படி பணிக்கு பொருட்கள் வாங்கிய பில்கள் ஆகியவற்றை சமர்ப்பித்தேன். அவரும் அதை வாங்கிகொண்டு வேலைக்கான பில் தயார் செய்வதாக சொன்னார். பின்னர் இது சம்பந்தமாக 06.06.2023-ந் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு ஓவர்சியர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களை கம்பம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள பொறியியல் பிரிவில் சென்று சந்தித்து கேட்டேன். அதற்கு அவர் M.Book-ல்

வேலைக்குரிய செலவு தொகையினை பட்டியலிட்டு மொத்தம் ரூ.1,83,000/- கணக்கிடப்பட்டுள்ளது என்றும் அதற்கான பில்லை தயார் செய்து பில் தொகை கிடைக்க ஏற்பாடு செய்ய நீ அந்த தொகையில் 4% சதவீதம் அதாவது ரூ.7500/-ம் அத்துடன் கூடுதலாக செலவுக்கு ரூ.7000/-ம் ஆக மொத்தம் ரூ.14,500/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் என்ன சார் இவ்வளவு தொகை கேட்கிறீர்கள். இந்த பராமரிப்பு பணி வேலையில் எனக்கு எந்த லாபமும் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நடைமுறையில் உள்ளதைதான் கேட்கிறேன் கொடுத்தால்தான் பில் தயார் செய்து கையொப்பம் செய்து பில் தொகை ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். சரி என்று நானும் வந்து எனது மற்ற வேலைகளை பார்த்துக்கொண்டிருந்தேன். பின்னர் 20.06.2023-ந் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் கம்பம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்று பொறியியல் பிரிவில் ஓவர்சியர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களை சந்தித்து எனது பில் பற்றி கேட்டேன். அப்போது அவர் நான் கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் வேலைகள் நடந்து கொண்டிருப்பதால் தற்போது பணம் புரட்ட சிரமமாக உள்ளது கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்றேன். அதற்கு அவர் ஏற்கனவே குறைத்துதான் பில் தொகைக்கு ரூ.7,500/-ம் செலவுக்கு ரூ.7,000/-ம் கேட்டேன். இதில் குறைப்பதற்கு ஒன்றுமில்லை என்று சொன்னார். வேறு வழியில்லாமல் நானும் வந்து விட்டேன். பின்னர் 26.06.2023-ந் தேதியில் கம்பம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அன்று மாலை சுமார் 04.00 மணிக்கு அரசு ஒப்பந்ததாரர்கள் கூட்டம் பி.டி.ஓ. தலைமையில் நடைபெறுவதாகவும் அதற்கு வரச்சொல்லி கம்பம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இருந்து போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள். அதன்படி நான் மற்றும் சில ஒப்பந்ததாரர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டோம். பின்னர் கூட்டம் முடிந்து மாலை சுமார் 06.00 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் உள்ள பொறியியல் பிரிவிற்கு சென்று அங்கிருந்த ஓவர்சியர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களை சந்தித்து மேற்படி எனது பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை தற்போது நான் செய்யும் வேலைகளுக்கு செலவு செய்து விட்டேன். ஏதாவது பில் பாஸ் செய்தால் தான் எனக்கு பணம் வரும் தற்போது சிரமமாக உள்ளது. கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் குறைப்பதற்கு ஒன்றுமில்லை கஷ்டமாக இருந்தால் பில் தயார் செய்ய கேட்ட தொகை ரூ.7,500/-யை முதலில் கொடுங்கள் செலவுக்கு கேட்ட பணம் ரூ.7,000/-யை பிற்பாடு கொடுங்கள் என்று சொல்லி நாளை 27.06.2023-அன்று தனக்கு வெளி வேலைகள் இருப்பதாகவும் நாளை மறுநாள் 28.06.2023-ந் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு கம்பம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் வந்து பொறியியல் பிரிவு அலுவலகத்தில் தன்னை சந்தித்து தான் பில் தயாரிக்க கேட்ட பணம் ரூ.7,500/-ம் முதலில் கொடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் பில் தயார் செய்ய முடியாது நீ செய்த வேலைக்கு பணம் பெற அலைய

வேண்டியதுதான் என்று கராராக சொல்லிவிட்டார். நானும் என்ன செய்வதென்று தெரியாமல் வீட்டிற்கு வந்து எனது தாயார் திருமதி.சந்திரா அவர்களிடமும் சொன்னேன். அவரும் மற்ற இடங்களில் நடக்கும் வேலைகளுக்கும் பணம் வேண்டியுள்ளது செய்த வேலைக்கும் பில் போடமாட்டாங்க சிரமமாக உள்ளது என்று சொன்னார். எனக்கும் தாயார் பெயரில் நான் செய்த ஆண்கள் கழிப்பறை பராமரிப்பு பணி வேலைக்கு பில் தயார் செய்து பணம் பெற ஏற்பாடு செய்ய கம்பம் ஊராட்சி ஒன்றிய ஓவர்சியர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து பில் தயார் செய்து அதன்மேல் பில் தொகை ரூ.1,83,000/- பெற எனது மனம் விரும்பவில்லை. அதனால் எனது தாயாரிடமும் பேசிவிட்டு, தாயார் பெயரில் நான் செய்த மேற்படி அரசு ஒப்பந்த வேலைக்குரிய பில்லை தயார் செய்து அதற்குரிய தொகை பெற ஏற்பாடு செய்ய லஞ்சமாக, பணம் ரூ.7,500/- முதல் தொகையாக கேட்ட கம்பம் ஊராட்சி ஒன்றிய ஓவர்சியர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகாரை அளிக்கிறேன். அத்துடன் மேற்படி பராமரிப்பு பணிக்கான பணி உத்தரவு நகல் மற்றும் பணிமுடிந்தற்காக எடுக்கப்பட்ட புகைப்பட நகலையும் இணைத்துள்ளேன். மேலும் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் லஞ்சமாக கேட்ட முன்பணம் ரூ.7,500/-யை கொண்டுவந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள. Sd/- XXXXX (பி.கருப்பசாமி, 27.06.2023)

Sir, Received this complaint on 27.06.2023 at 15.00 hrs. A confidential verification was conducted in respect of the complaint as well as the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.02/2023, u/s 7 of the PC Act 1988 as amended by the PC (Amendment) Act, 2018 was registered on 27.06.2023 at 16.00 hrs. Sd/- (C.Jeyapriya, Inspector of Police, V&AC, Theni).

The original FIR, original complaint along with documents of Tr.P.Karuppasamy, S/o.Pitchai, Gudalur, Uthamapalayam Taluk, Theni District is sent to the Chief Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent to the superior officers concerned.

(C.JEYAPRIYA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.